செ.வெ.எண் : 50 /ஜூன் நாள் : 24.06.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**நீர்நிலைகளில் இருந்து எடுக்கப்படும் வண்டல் படிமங்களை விவசாயிகள் வேளாண்மை பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி உறுதி செய்திட வேண்டும்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், களஆய்வின்போது அலுவலர்களுக்கு அறிவுருத்தல்**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.06.2017) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், பாம்பூர் ஊராட்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பாரத பிரதமர் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.93 கோடி மதிப்பில் கீரந்தை முதல் பாம்பூர் வரையிலான 4.37 கி.மீ தொலைவு புதிய தார்சாலை அமைக்கும் பணிகளும், தமிழ்நாடு கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.35.90 இலட்சம் மதிப்பில் முதுகுளத்தூர் சாலை முதல் எஸ்.காவனூர் வரையிலான தார்சாலையினை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., இந்த சாலை பணிகளின் தரம் குறித்து நேரடியாக ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, பாம்பூர் கிராமத்தில் திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், கழிவு மற்றும் குப்பைகளை தரம் பிரித்து மறு சுழற்சி செய்து ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்திட ஏதுவாக ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பில் குப்பைகள் தரம் பிரிக்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அதனருகிலேயே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன் பெறும் வகையில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பில் மண்புழு உரம் தயாரிக்கும் கூடம் அமைப்பதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விரு பணிகளையும் ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இத்தகைய திட்டங்களின் மூலம் சுற்றுப்புற சுகாதாரத்தினை மேம்படுத்திட முடியும் என்ற எண்ணத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்தி, இத்திட்ங்களை சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுருத்தினார்.

அதன்பின்பு பாம்பூர் கிராமத்தில் செயல்பட்டு வரும் அரசு மாணவர் தங்கும் விடுதியில் (ஆதி திராவிடர் நலம்) மாவட்ட ஆட்சித் தலைவர், திடீர் ஆய்வு மேற்கொண்டார், அப்போது விடுதியில் பராமரிக்கப்பட்டு வரும் மாணவர்கள் விபரப்பதிவேடு, உணவு பொருட்கள் இருப்பு குறித்த பதிவேடு உள்ளிட்ட அனைத்து பதிவேடுகளையும் ஆய்வு செய்தார். மேலும் சமையலறை, உணவு பொருட்கள் சேமிப்பு அறை ஆகியவற்றையும், மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, பாம்பூர் கிராமத்தில் உள்ள ஒச்சானூரரணி மற்றும் பாமபூர் ஊரணி ஆகிய ஊரணிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் ஊரணி ஆழப்படுத்தும் பணிகளை ஆய்வு செய்தார். இதுதவிர, பாம்பூர், விளத்தூர், எஸ்.காவனூர் ஆகிய கிராம பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் இருந்து விவசாயிகள் மூலம் எடுக்கப்பட்டு வேளாண்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள வண்டல் படிமங்கள் குறித்தும் நேரடி ஆய்வு மேற்கொண்டார். நீர்நிலைகளில் இருந்து எடுக்கப்படும் வண்டல் படிமங்களை விவசாயிகள் வேளாண்மை பணிகளுக்கு மட்டுமே பயன்திட வேண்டும் என்பதை விவசாயிகளிடத்தில் வலியுறுத்தி உறுதி செய்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுருத்தினார்.

இந்த ஆய்வின்போது ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திரு.கே.கே.பாபு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.வீரராகவன், திரு.சந்திரமோகன், உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**